# அவசர குடல் மருத்துவப் பரிந்துரைகளுக்கான நோயாளி குறித்த தகவல்கள்

## உங்கள் பொது மருத்துவர் ஏன் உங்களை அவசரமாக மருத்துவமனைக்குச் செல்லப் பரிந்துரைத்தார் என்பதையும் நீங்கள் செய்ய வேண்டியது குறித்தும் இந்தத் தகவல் தாள் விளக்குகிறது

**நான் ஏன் அவசரமாக மருத்துவமனைக்குச் செல்லப் பரிந்துரைக்கப்பட்டேன்?**
புற்றுநோய் உருவாவதற்கான சாத்தியம் உள்ளதா இல்லையென உறுதிசெய்வதற்காக பொது மருத்துவர் உங்கள் குடல் அறிகுறிகளைக் கூடுதலாகச் சோதிக்க வேண்டுமென்று நினைக்கிறார். உங்களிடம் என்ன தவறுள்ளது என்பதைக் கண்டறிய நீங்கள் விரைவாகப் பரிசோதிக்கப்படலாம்.

**எனக்குக் குடல் புற்றுநோய் உள்ளது என்று இதற்கு அர்த்தமா?**
புற்றுநோய்க்கான வாய்ப்பு உட்பட பல பொதுவான குடல் நோய்களோடு உங்கள் அறிகுறிகள் தொடர்புடையதாக இருக்கலாம். அவசரமாகப் பரிந்துரைக்கப்பட்ட பலருக்கு புற்றுநோய் இருப்பதில்லை. எனினும், உங்களுக்கு ஒதுக்கப்பட்ட சந்திப்பு நியமனத்திற்கு நீங்கள் செல்வது முக்கியம். காரணம், புற்றுநோய் ஆரம்பத்திலேயே கண்டறியப்பட்டால், சிகிட்சை மேலும் பலனுள்ளதாக அமைய வாய்ப்புள்ளது.

**இந்தப் பரிந்துரை அவசரம் என்பதால், இரு வாரங்களுக்குள், பெரும்பாலும் முன்னக்கூட்டியே மருத்துவமனையில் உங்களுக்கு சந்திப்பிற்கான நியமனம் வழங்கப்படலாம். அடுத்த நான்கு வாரங்களில் நடைபெறக்கூடிய கூடுதல் சோதனைகளுக்கு நீங்கள் இருக்க வேண்டி வரலாம்.**

**நான் செய்ய வேண்டியது என்ன?**

- உங்கள் பொது மருத்துவர் உங்கள் அறிகுறிகளைச் சோதனையிடுவதன் ஒரு பகுதியாக ’FIT' (Faecal Immunochemical Test) என்றழைக்கப்படும் மலப் பரிசோதனையை எடுக்கும்படி உங்களிடம் கேட்கப்படலாம். இந்தச் சோதனை மலத்தில் கண்ணுக்கே தெரியாத மிகச்சிறிய அளவில் இரத்தம் காணப்படுகிறதா என்பதைச் சோதிக்கிறது. சோதனையை முடிக்கும் முன்பாக, அதனுடன் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துக் கூடிய விரைவாக அதை உங்கள் பொது மருத்துவரிடம் திருப்பி அளியுங்கள்.
- மருத்துவமனை உங்களை தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொள்ள வேண்டியிருக்கலாம் என்பதால் கைபேசி எண் இருந்தால் அது உட்பட சரியான முகவரியும் தொலைபேசி எண்ணும் உங்கள் பொது மருத்துவரிடம் இருப்பதை உறுதிசெய்யுங்கள்.
- அடுத்த நான்கு வாரங்களுக்குள் உங்களால் சந்திப்பு நியமனத்திற்கு வரமுடியவில்லை எனில், தயவுசெய்து உங்கள் பொதுமருத்துவரிடம் தெரிவிக்கவும்.
- உங்களுக்கு ஒரு மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் அல்லது பெண் ஆலோசகரை நீங்கள் விரும்பினால், அவர்கள் உங்களைத் தொடர்புகொள்ளும்போது மருத்துவமைக்கு அதைத் தெரியப்படுத்துங்கள்.
- இரு வாரங்களில் மருத்துவமனையிலிருந்து நீங்கள் சந்திப்பு நியமனங்களைப் பெறவில்லை எனில், தயவுசெய்து உங்கள் பொது மருத்துவரைத் தொடர்புகொள்ளுங்கள். மாறாக, உங்களுக்குப் பரிந்துரைக்கப்பட்ட மருத்துவமனைக் குறித்து உங்களுக்குத் தெரியுமென்றால், நீங்கள் அவர்களது நோயாளி ஆலோசனை மற்றும் தொடர்புச் சேவைகள் (PALS) துறையைத் தொடர்புகொள்ளலாம்.
- உங்கள் அறிகுறிகள் அல்லது நிலை மோசமடைவதாக நீங்கள் உணர்ந்தால், அதுக் குறித்து ஆலோசிக்க உங்கள் அறுவைசிகிச்சை நிபுணரைத் தொடர்புகொள்வது மிக முக்கியம்.

**எனது சந்திப்பு நியமனத்தில் என்ன நிகழும்?**
உங்கள் அறிகுறிகளைப் பொறுத்து பின்வருவனவற்றுள் ஒன்று உங்களுக்கு வழங்கப்படும்:

1. ஒரு சிறப்பு நிபுணரைப் பார்ப்பதற்காக **நேருக்குநேர் புறநோயாளி சந்திப்பு நியமனம்**. மருத்துவமனை உங்களைத் தொடர்புகொண்டு சந்திப்பு நியமனத்திற்கு ஒப்புதலைத் தரும். காத்திருப்பு நேரங்களையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டிய பரிசோதனைகளையும் பொறுத்து இந்தச் சந்திப்பு நியமனங்களுக்கு ஒருசில மணி நேரங்கள் எடுக்கலாம்.
2. **சிறப்புப் பயிற்சி பெற்ற குடல்நோய் செவிலி மூலம்** உங்கள் அறிகுறிகள்குறித்து மேலும் கண்டறியவும் உங்களுக்கான சிறந்த சோதனைக்கான ஆலோசனைக்கும் ஒரு தொலைபேசி மதிப்பீடு அல்லது காணொளி அழைப்பு செய்யப்படும். உங்கள் அறிகுறிகளுக்குக் காரணம் என்னவாக இருக்குமென்று அவர்கள் நினைக்கிறார்களோ அது குறித்தும் உங்களுடன் அவர்கள் பேசலாம். ***தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்:*** *நீங்கள் அழைப்பைப் பதிவுசெய்ய நினைத்தாலோ அல்லது அழைப்பில் ஒரு நண்பரை அல்லது குடும்ப உறுப்பினரையும் சேர்க்க விரும்பினாலோ மருத்துவரிடம் நீங்கள் தெரியப்படுத்த வேண்டும்.*
3. சில சமயங்களில், முதலில் மதிப்பாய்வு செய்யாமல் **நேரடியாகவே சோதனைக்கு**மருத்துவமனை அனுப்பலாம். சோதனைக்குத் திட்டமிடும்போது கவனத்தில் கொள்ள வேறு உடல்நலப் பிரச்சினைகள் இல்லாதபோது இவ்வாறு நடக்கலாம். இந்தப் பரிசோதனையில் கேமரா மூலம் குடல் ஆய்வு (எண்டோஸ்கோபி) அல்லது சிடி ஸ்கேன் செய்யப்படலாம். உங்கள் சோதனைகளுக்கான தேதியுடன் மருத்துவமனை உங்களைத் தொடர்புகொள்ளும்போது சொதனை குறித்த கூடுதல் விபரங்கள் வழங்கப்படும். இந்தச் சமயத்தில் சோதனைக்குத் தயாராக நீங்கள் செய்ய வேண்டியது ஏதேனுமிருந்தால் உங்களுக்குத் தெரியப்படுத்தப்படும். இந்த வகையான சந்திப்பு நியமனத்தில் உங்களை மருத்துவமனையிலுள்ள நிபுணர் குழு பரிசோதிக்கவோ அல்லது நிபுணத்துவமுள்ள செவிலியினால் முதலில் ஆய்வு செய்யப்படவோ மாட்டீர்கள் என்பதால் அறிவுறுத்தல்களைக் கவனமாகப் பின்பற்றவும்.

உங்கள் மலக்குடல் குறித்துப் பேசுவது உங்களுக்கு சங்கடமாக இருக்குமென்பதை அறிவோம். ஆனால் குடல் சிறப்பு வல்லுநர் குழு (பெருங்குடல் குழு என்றும் அறியப்படும்) உறுப்பினர்கள் இந்த விஷயத்தில் நன்கு பழகியவர்கள். உங்கள் அறிகுறிகளைப் பற்றி ஆலோசிப்பதில் அல்லது கேள்விகளுக்கு விடையளிப்பதில் சங்கோஜமாகவோ அல்லது அசௌகரியமாகவோ உணராமலிருக்க முயலுங்கள். “மலம்” போன்ற உங்கள் குடல் தொடர்பாக நீங்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தத் தயங்காதீர்கள்.

இந்தப் பரிசோதனைகளின் முடிவுகள்குறித்து பரிந்துரைக்கப்பட்ட 28 நாட்களுக்குள் உங்களைத் தொடர்புகொள்வோம். சில வேளைகளில், உங்கள் அறிகுறிகளுக்குக் காரணம் என்னவாயிருக்கும் என்பதை மருத்துவமனை அப்போதே சொல்லவும் நேரடியாகச் சிகிச்சையை வழங்க அல்லது சிகிச்சைக்குப் பரிந்துரைக்கலாம். உங்கள் சோதனை முடிந்த ஒருசில வாரங்களுக்குள் ஏதும் பதில் இல்லையெனில் தயவுசெய்து மருத்துவமனையைத் தொடர்புகொள்ளவும்.

ஆதரவுக்காக அல்லது உங்களிடம் மருத்துவக்குழு தெரிவிப்பதைப் புரிந்துகொள்வது குறித்த கவலை இருந்தால் நீங்கள் ஒரு நண்பரையோ அல்லது குடும்ப உறுப்பினரையோ உங்களுடன் அழைத்துவர விரும்பலாம். வருகையாளர்கள் குறித்த வழிகாட்டுதலுக்கு உங்கள் சந்திப்பு நியமனக் கடிதத்தைப் பார்க்கவும்.

**எத்தகைய சோதனையை நான் எடுக்க வேண்டியிருக்கும்?**
வெவ்வேறு சோதனைகள் உங்களைப் பற்றியும் உங்கள் குடல்களைப் பற்றியும் நமக்கு வெவ்வேறு தகவல்களைத் தருகின்றன. குடல் குழுவினர் பயன்படுத்தும் மிகப் பொதுவான சோதனைகள்:

- பிளெக்சிபிள் சிக்மாய்டோஸ்கோப்பி
- கொலனோஸ்கோப்பி
- சிடி கொலனோஸ்கோப்பி
- சிடி ஸ்கேன்
- எம்ஆர்ஐ ஸ்கேன்
- அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன்

இந்தத் துண்டுப்பிரசுரத்தில் கலைச்சொற்களில் இந்தச் சோதனைகள் விளக்கப்பட்டுள்ளன. இந்தச் சோதனைகளில் ஒன்றுக்கு (அல்லது சிலநேரங்களில் அதற்கும் மேல்) நீங்கள் அனுப்பப்படும் வாய்ப்புள்ளது. சோதனைகளை நடத்தும் துறை அதன்பின் உங்களுக்கு சந்திப்பு நியமனக் கடிதத்தையும், சோதனையின் அபாயங்கள் மற்றும் பலன்கள், சோதனைக்கு உங்கள் குடலை எப்படித் தயாராக வைத்திருப்பது ஆகிய விபரங்கள் உட்பட சோதனை பற்றிய கூடுதல் விபரங்களையும் அனுப்பும்.

**பரிந்துரைக்கப்படும் சோதனைகளை எடுக்காமலிருக்க நான் முடிவுசெய்தால் என்னாகும்?**
உங்கள் தொலைபேசி மதிப்பீடு/சந்திப்பு நியமனத்தில் இதுப் பற்றிப் பெருங்குடல் நிபுணருடன் நீங்கள் கலந்தாலோசிக்கலாம். அப்போதும் சோதனைகளைத் தொடர நீங்கள் விரும்பாவிட்டால் அதன்பின் உங்கள் பொதுமருத்துவருடன் ஆலோசிக்கலாம்.

**உங்கள் சந்திப்பு நியமனத்திற்கு முன்பாக பயனுள்ள உதவிக்குறிப்புகள்**
உங்கள் தொலைபேசி/சந்திப்பு நியமனத்தின் போது இந்தக் கேள்விகள் உங்களிடம் கேட்கப்படலாம். எனவே முன்கூட்டியே உங்கள் விடைகளைத் தயாராக வைத்திருப்பது உதவியாக இருக்கும்.

*<u>உங்கள் அறிகுறிகள்</u>*

- உங்கள் குடல்களில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது?
- எவ்வளவு காலமாக அறிகுறிகள் உள்ளன?
- அவை தொடர்ந்து இருக்கிறதா அல்லது வருவதும் போவதுமாகவா?
- இதில் ஏதேனும் ஒழுங்கு முறை உள்ளதா? எ.கா., நாளில் ஒரே நேரத்தில் வருவது, உணவுக்கு முன்பு அல்லது பின்பு இதுபோல.

*<u>உங்கள் வாழ்க்கைமுறையில் மாற்றம்</u>*

- உங்கள் உணவுமுறை அல்லது உடற்பயிற்சியை மாற்றினீர்களா?
- சமீபத்தில் மன அழுத்தத்தை உணர்ந்தீர்களா?
- சமீபத்தில் வெளிநாடு சென்றிருந்தீர்களா?
- உங்கள் நண்பர்கள், குடும்பத்தினர் அல்லது உடன் பணிபுரிவோருக்கு இதே பிரச்சினை உள்ளதா?
- ஏதேனும் புது மருந்து எடுக்கிறீர்களா?

*<u>உங்கள் மருத்துவ வரலாறு</u>*

- கடந்த காலத்தில் ஏதேனும் குடல் அல்லது செரிமானப் பிரச்சினைகள் இருந்ததா?
- ஏதேனும் அறுவைசிகிச்சை உங்களுக்குச் செய்யப்பட்டுள்ளதா?
- இதற்குமுன் உங்களுக்கு இதயநோய் தொடர்பான மருத்துவ வரலாறு உள்ளதா?
- இரத்தத்தை நீர்க்கச் செய்யும் மருந்துகள் ஏதும் எடுக்கிறீர்களா?

- நீங்கள் சர்க்கரை நோயாளியா? அப்படியென்றால், மாத்திரை அல்லது இன்சுலின் எடுக்கிறீர்களா?

*குடும்ப மருத்துவ வரலாறு*

- உங்கள் குடும்பத்தில் யாருக்காவது புற்றுநோய், குறிப்பாகக் குடல் புற்றுநோய் உள்ளதா?
- உங்கள் குடும்பத்தில் யாருக்காவது குடல் நோய் உள்ளதா? உதாரணமாக குரோன் நோய் அல்லது குடலழற்சி போன்றவை

*உங்கள் தனிப்பட்ட சூழ்நிலைகள்*

- நீங்கள் தனியாக வசிக்கிறீர்களா?
- எந்தளவு இடம்பெயரக்கூடியவர் நீங்கள் / வேறிடம் செல்ல உதவி தேவைப்படுகிறதா?
- உங்களைச் சுற்றி எத்தகைய ஆதரவைக் கொண்டிருக்கிறீர்கள்?
- தற்போது பணிபுரிகிறீர்களா?
- ஏதேனும் சிறப்பு தகவல்தொடர்புத் தேவை உங்களுக்கு உள்ளதா?
- ஏதேனும் போக்குவரத்துப் பிரச்சினைகள் உள்ளதா?

*இறுதியாக, நினைவில் கொள்ளுங்கள்*

குடல் அறிகுறிகளுள்ள பெரும்பாலானோருக்கு புற்றுநோய் **இருப்பதில்லை,** ஆனால் அந்த அறிகுறிகளைச் சோதித்தறிவது முக்கியம். காரணமானது பெரும்பாலும் மூலம் அல்லது எரிச்சல் எடுக்கும் குடல் நோய்க்குறி போன்ற சிறியதாகத்தான் இருக்கும்.
உங்களிடம் சொல்லப்பட்டது சரியாகத் தெரியாவிட்டால் அல்லது புரியாவிட்டால், **தயவுசெய்து கேளுங்கள்.**

**கூடுதல் தகவல்கள்**
**குடல் புற்றுநோய் யுகே** https://www.bowelcanceruk.org.uk/about-bowel-cancer/diagnosis/visiting-your-gp/
**மேக்மில்லன் புற்றுநோய் ஆதரவு** 0808 808 0000
**புற்றுநோய் ஆராய்ச்சி UK** 0808 800 4040

**கலைச்சொற்கள்: நாங்கள் பயன்படுத்தும் சொற்களை விளக்குதல்**

*Colo* - பெருங்குடலைக் குறிக்கிறது

*கொலனோஸ்கோப்பி* - ஒரு முனையில் கேமராவுடன் கூடிய மெலிதான நெகிழ்வான டெலஸ்கோப். இது குடலுக்குள் பின்புறம் வழியாகச் செருகப்பட்டு பெருங்குடல் முழுவதும் பரிசோதிக்கப்படும். இந்தச் சோதனைக்கு முந்தைய நாள் எடுத்துக் கொள்வதற்காக சில வலுவான தெளிவான தூள்கள் உங்களுக்கு அனுப்பப்படும். இந்தச் சோதனைக்காக உங்களுக்கு மயக்க ஊசி போடப்படும்.

*Computerised Axial Tomogram (சிடி ஸ்கேன்)* - ஒரு சிறப்பு ஸ்கேன். இதில் உளுந்தவடை வடிவிலான எக்ஸ் ரே எந்திரமானது நீங்கள் மேசையில் படுத்திருக்கும்போது உங்களது குறுக்கு வெட்டு எக்ஸ்ரே படங்களை எடுக்கும். இந்தச் சோதனைக்கு நீங்கள் வரும்போது ஒரு சிறப்புச் சாய ஊசி உங்களுக்குப் போடப்படும். அதற்கு எதிர்மாறான திரவத்தை அருந்தும்படி கேட்கப்படும்.

*CT Colonography* - சிலநேரங்களில் இது மெய்நிகர் கொலனோஸ்கோப்பி என்றும் அழைக்கப்படும். இது ஒரு சிறப்பு சிடி ஸ்கேன். இது சாய பானம் அல்லது சில நேரங்களில் சோதனைக்கு முந்தைய நாள் திடமான தெளிவான பொடியை எடுத்தபின் பெருங்குடல் மற்றும் மலக்குடல் உள்ளே மிக விரிவான படங்களை எடுப்பதற்காக சிடி ஸ்கேனரைப் பயன்படுத்துகிறது.

*Flexible Sigmoidoscopy* - ஒரு முனையில் கேமராவுடன் கூடிய மெலிதான நெகிழ்வான டெலஸ்கோப். இது குடலுக்குள் பின்புறம் வழியாகச் செருகப்பட்டு பெருங்குடலின் கீழ்ப்பகுதி பரிசோதிக்கப்படும். இந்தச் சோதனைக்கு முந்தைய நாள் எடுத்துக் கொள்வதற்காக சில வலுவான தெளிவான மாத்திரைகள் உங்களுக்கு அனுப்பப்படும்.

*Magnetic Resonance Imaging (எம்ஆர்ஐ ஸ்கேன்)* - இதில் ஒரு திறந்த முனையுள்ள உலோக உருளைக்குள் நீங்கள் படுத்திருக்கையில் உங்களின் விரிவான எக்ஸ்ரே எடுக்கப்படும்.

*Proctoscopy* - ஒரு சிறிய பிளாஸ்டிக் டெலஸ்கோப் உடன் பின்புற வழியில் பரிசோதனை (ஆசனவாய் மற்றும் மலக்குடல்).

*Rectal* - இது மலக்குடலைக் குறிக்கிறது (பின்புறத் துழைக்கு அருகே பெருங்குடலின் மிகக் கீழே உள்ள பகுதி).

*Ultrasound scan* - உங்கள் உட்பக்கங்களைச் சோதிக்க ஒலி அலைகளைப் பயன்படுத்தும் ஒரு ஸ்கேன். இது பெண்கள் கருத்தரிப்பின்போது பார்க்கும் ஸ்கேன் வகையைப் போன்றது.

இந்தத் துண்டறிக்கையானது இலண்டன் நோயாளிக் குழு மற்றும் இலண்டனுக்கான உருமாறும் புற்றுநோய்ச் சேவைகள் குழுவினால் புதுப்பிக்கப்பட்டது.

**உங்கள் ஆய்வுகளுக்கும் முடிவுகளுக்குமான தோராயமான கால வரம்பு கீழே தரப்பட்டுள்ளது. உங்கள் அறிகுறிகள் சிக்கலானவையாகவோ அல்லது பல பரிசோதனைகள் எடுக்க வேண்டிய தேவை உங்களுக்கு இருந்தாலோ இவை கூடுதல் நாட்கள் எடுக்கலாம்.**

## பரிந்துரை தொடக்கம்

**பரிசோதனைகள்**

மலப் பரிசோதனை (FIT சோதனை)

பொதுமருத்துவர் உங்கள் அறிகுறிகளுக்கான காரணத்தைத் தீர்மானிக்க உதவுவதற்காக உங்களைப் பரிந்துரைக்கும்போது ஒரு மலப் பரிசோதனை எடுக்கும்படி உங்களிடம் கேட்கலாம்.

## மருத்துவமனை சந்திப்பு நியமனம்

14 நாட்கள்

**பொது மருத்துவர் பரிந்துரை**

உங்கள் அறிகுறிகளைப் பொறுத்து, ஒரு சிறப்பு நிபுணரைச் சந்திப்பதற்காக உங்கள் பொதுமருத்துவர் மருத்துவமனைக்குப் பரிந்துரைக்கலாம் அல்லது பயிற்சிபெற்ற குடல் சோதனை செவிலியுடன் ஒரு காணொளி அல்லது தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தலாம் அல்லது கூடுதல் ஆய்வுக்காக நேரடியாக உங்களை சோதனைக்கு அனுப்பலாம்

**கூடுதல் ஆய்வு**

மேற்கொண்டு பரிசோதனைகளாக சிக்மோய்டோஸ்கோப்பி, கொலனோஸ்கோப்பி, சிடி ஸ்கேன் போன்றவை இருக்கலாம்

உங்கள் அறிகுறிகளுக்கான காரணத்தைத் தீர்மானிப்பதில் துறை வல்லுநருக்கு உதவுவதற்காகக் கூடுதல் பரிசோதனைகளை நீங்கள் எடுக்க வேண்டியிருக்கலாம். இந்தச் சந்திப்பு நியமனத்திற்குத் தயவுசெய்து முன்னுரிமை அளியுங்கள்

**மருத்துவமனை சந்திப்பு நியமனம்**

உங்கள் அறிகுறிகளையும் முடிவுகளையும் ஒரு சிறப்பு நிபுணருடன் ஆலோசிப்பதற்காக உங்கள் சந்திப்பு நியமனம் இருக்கும். உங்களுடன் ஒரு குடும்ப உறுப்பினரை அல்லது நண்பரை நீங்கள் அழைத்து வரலாம்

ஓர் சிறப்பு நிபுணருடன் அவசரச் சந்திப்பு நியமனத்திற்கு மருத்துவமனைக்கு வரும்படி உங்களுக்கு பரிந்துரைக்கப்பட்டால், தயவுசெய்து இந்தச் சந்திப்பு நியமனத்திற்கு முன்னுரிமை அளியுங்கள்.

## நோயறிதல் அல்லது புற்று நோய் விலக்கப்பட்டது

28 நாட்கள்

**முடிவுகள்**

இந்தப் பரிசோதனைகளின் முடிவுகள்குறித்து பரிந்துரைக்கப்பட்ட 28 நாட்களுக்குள் உங்களைத் தொடர்புகொள்வோம். ஆனால் அதே நாளில்கூட உங்கள் பரிசோதனை முடிவுகள் தெரிவிக்கப்படலாம்.

**புற்றுநோய் இல்லையென கண்டறியப்பட்டது**

உங்கள் துறை வல்லுநர் புற்றுநோய் இல்லையென்பதை உறுதிப்படுத்தி அடுத்து என்ன எதிர்பார்க்க வேண்டும் என்பதையும் உங்களுக்குத் தெரியப்படுத்துவார்.

இப்போதும் பரிசோதிக்க வேண்டிய அறிகுறிகள் உங்களிடம் இருக்கலாம். அவை தொடர்ந்தால் அல்லது மேலும் தீவிரமடைந்தால் நீங்கள் உங்கள் பொது மருத்துவரைத் தொடர்புகொள்ள வேண்டும்

## சிகிச்சையளிக்கும் முடிவு

31

## முதல் சிகிச்சை

**புற்றுநோய் கண்டறியப்பட்டது**

புற்றுநோய் கண்டறியப்பட்டதை உங்களுக்குத் தெரியப்படுத்தவும் சிகிச்சைக் குறித்து ஆலோசிக்கவும் உங்கள் துறை வல்லுனர் உங்களைத் தொடர்புகொள்வார்

உங்கள் புற்றுநோய் சிகிச்சைக் குழுவும் உங்கள் பொது மருத்துவரும் என்ன எதிர்பார்க்கலாம், சிகிச்சையைத் தொடங்கும்போது கூடுதல் ஆதரவை எங்குப் பெறலாம் என்பது குறித்த உங்கள் கேள்விகளுக்குப் பதிலளிப்பார்கள்